சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – புதிய அறிவிப்புகள் 2015–2016 – மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகளுள் வருடந்தோறும் சிறந்த ஓர் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியையும், ஓர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியையும் தேர்வு செய்து, அப்பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்திட தலா ரூ.5 இலட்சம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 5 நாள் 07.01.2016

மன்மத, மார்கழித்திங்கள் 22 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:–

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். க1/24613/2015, நாள் 23.09.2015.

******

ஆணை :

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் 2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கையில் 16.09.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 1,431 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அப்பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளிகளிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையினை ஊக்குவிக்கும் பொருட்டு, மாணவர்களின் அறிவுத் திறன், தேர்ச்சி விழுக்காடு, சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணுதல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் வருடந்தோறும் சிறந்த ஓர் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியும், ஓர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியும் தேர்வு செய்து, அப்பள்ளிகளின் கல்வி தரத்தை மேம்படுத்திட தலா ரூ.5 இலட்சம் வழங்கப்படும்."

2. மேற்கண்ட அறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் விரிவான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். ஆதி திராவிடர் நல இயக்குநர் தனது கருத்துருவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்

கீழ் 1,431 பள்ளிகள் இயங்கி வருகின்றன என்றும், இவற்றில் 83 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள், 17 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள், ஆக மொத்தம் 100 மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன என்றும், மேல்நிலைப் பள்ளிகளுக்கிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையினை ஊக்குவிக்கும் பொருட்டு மாணாக்கர்களின் அறிவுத்திறன், தேர்ச்சி விழுக்காடு, சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணுதல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் சிறந்த பள்ளிகளைத் தேர்வு செய்து, அப்பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவது பள்ளி வளர்ச்சித் திட்டத்திற்கு மிகவும் உதவியாக அமையும் என்றும், எந்த ஒரு கல்வி நிறுவனமும், தன்னுடைய நிலையில் மேலும் மேலும் முன்னேறுவதற்கான வழிகளைக் கையாள வேண்டும் என்றும், அந்த அடிப்படையில் மேல்நிலைப் பள்ளிகளுக்கிடையில் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கும் பொருட்டும், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சிறந்த ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகளை ஊக்குவிக்கும் பொருட்டும், ஆதி திராவிடர் நல இயக்குநரகத்தில் ஒரு குழு அமைத்து, கல்வி அறிவுத்திறன், 100% தேர்ச்சி, சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுப்புறச் சூழல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் ஆண்டுதோறும் ஓர் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியையும், ஓர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியையும் தேர்வு செய்து, அப்பள்ளிகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கலாம் என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகளில், ஒவ்வொரு ஆண்டும் ஓர் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியையும், ஓர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியையும் தேர்வு செய்து, அப்பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட தலா ரூ.5 இலட்சம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அனுமதி வழங்குமாறும், திட்டச் செலவினமாக ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம்) நிதி ஒப்பளிப்பு செய்யுமாறும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், 2015-2016 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், ஆதி திராவிடர் நல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு குழு அமைத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகளுள், மாணாக்கர்களின் அறிவுத்திறன், தேர்ச்சி விழுக்காடு, சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணுதல்ஆகிய காரணிகளின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் சிறந்த ஓர் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியையும், ஓர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியையும் தேர்வு செய்து, அப்பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட தலா ரூ.5 இலட்சம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிப்பதுடன், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் பொருட்டு செலவினமாக ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண்.4, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் கீழ்க்கண்டவாறு புதிதாக தொடங்கப்படும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

i. <u>ஆதி திராவிடர் நலத்துறை – துறை குறியீடு –02</u>

" 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதி திராவிடர் நலன் – 277 கல்வி –I திட்டத்தில் சேராதது BF சிறந்த ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியின் கல்வி தரத்தை மேம்படுத்திட பரிசு வழங்குதல் – 59 பரிசுகளும் வெகுமதிகளும்

(த.தொ.கு 2225 01 277 BF 5905) "

ii. <u>பழங்குடியினர் நலத்துறை – துறை குறியீடு –03</u>

" 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் –277 கல்வி – I திட்டத்தில் சேராதது AX சிறந்த அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியின் கல்வி தரத்தை மேம்படுத்திட பரிசு வழங்குதல் – 59 பரிசுகளும் வெகுமதிகளும்

(த.தொ.கு 2225 02 277 AX 5909) "

6. மேலே பத்தி 5(i)–இல் புதிய கணக்கு தலைப்பிற்கு ஆதி திராவிடர் நல இயக்குநரும் பத்தி 5(ii)–இல் உள்ள புதிய கணக்கு தலைப்பிற்கு பழங்குடியினர் நல இயக்குநரும் கணக்கு நேரமைப்பு, மதிப்பீடு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் / கருவூலகக் கணக்கு அலுவலர் அவர்கள் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்களது ஏடுகளில் தோற்றுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது பணித் திட்டம்" குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963–இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வரவு–செலவு–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் / பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2015–2016 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (ஆதி (ம) பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் / பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

9. பள்ளிகளுக்கு வழங்கப்படும் தொகையில் கீழ்க்கண்ட செலவினங்களை மேற்கொள்ளலாம்:-

- அப்பள்ளியில் பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்கலாம்.
- பள்ளி நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்கவும், மேசை மற்றும் நாற்காலி போன்ற தளவாடப் பொருட்கள் வாங்கவும் பயன்படுத்தலாம்.

10. திட்டச் செயல்பாடு முடிந்தவுடன் முன்னேற்ற அறிக்கையினை தவறாமல் அரசுக்கு அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண்.69444/ஆதி(ம)பந/2015-1, நாள் 31.12.2015-இல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1820 (ஆயிரத்து எண்ணூற்று இருபது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசுச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பந / வரவு-செலவு பொது I (ம) II) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்